மன்றத்திலும் வைக்கவேண்டும் என்கிற யோசனை இப்பொழுது முடியாது. பின்னால் வசதிகள் வந்த பிறகு அதைப்பற்றி யோசிக்கலாம்.

Post of Director of Information

*189 Q.—DR. H. V. HANDE, THIRU K. VINAYAKAM and THIRU N. S. V. CHITHAN : Will the Hon. Chief Minister be pleased to state whether this Government has any proposal to revive the post of Director of Information ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

DR. H. V. HANDE : Sir, what are the reasons for the abolition of this post and when was it abolished? Also, are the Government aware of the fact that the public relationship vis-a-vis the State Government are suffering due to want of a proper publicity officer? Whenever the Government take a policy decision, that must be made known to the public by the issue of a Press handout. So, will not this Government revive this post or at least set up a machinery by which the Press will be issued with a handout and the public also will know what exactly is in the minds of the Government?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாவட்ட அளவில் மாவட்ட விளம்பர அதிகாரிகள் வைத்து இருந்ததை அப்படிப்பட்ட நிலையில் இருக்க வேண்டிய அவசியமில்லை என்றும், தலைமை அதிகாரி என்ற அளவில் மட்டும் வைத்து சீரமைப்புச் செய்யலாம் என்றும்தான் ஆரம்பத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் விஷயங்களையும் கவனித்து சீரமைப்புச் செய்யும் உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறது.

திரு. கே. விநயகம் : சார், இந்த டைரக்டர் ஆப் பப்ளிசிடி என்கிற ஒரு போஸ்ட், முன்பு இருந்ததே அதை அரசாங்கக் கட்சிக் காரர்களுக்கு விளம்பரம் செய்கிறார்கள், அரசாங்கத்திற்கு இல்லை, என்கிற அடிப்படையில் அந்த போஸ்ட் அபாலிஷ் செய்யப் பட்டதாகச் சொல்லப்பட்டதே. அதையே திரும்பவும் வைத்தால் இப்பொழுது இருக்கிற கட்சிக் காரர்களுக்கு விளம்பரம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச் சாட்டு சொல்லக் கூடாது. [redacted]

திரு. கே. விநயகம் : நான் காரணத்தைத்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிக் கேளுங்கள்.

THIRU K. VINAYAKAM: Sir, there was a feeling that this post was abolished because it was used by the then Party in power for propaganda purposes. Now, this Government can revive it and give publicity to their own party. It is in their own interest to do so. Why not they revive it?

1970 மார்ச் 4]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: யார் அந்த இடத்தில் அமர்த்தப் பட்டாலும், அது மாண்புமிகு திரு. விநாயகம் சொன்னதுபோல், முன்பு அது கட்சிப்பிரசாரத்திற்கு என்று அவரே கருதினாலும், அப்படிப்பட்ட கட்சிப் பிரசாரத்திற்கு அல்ல, அரசுப் பிரசாரத்திற்குத்தான் இடம் தரப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: சார், ரெயில்வேயில் இருந்த கருணாநந்தம் என்பவர் பிரசார அதிகாரியாக நியமிக்கப் பட்டிருக்கிறாரா? ஆம் எனில், அவருக்கு அந்தப் பதவிக்குத் தகுதி என்னென்ன என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பிரசாரம் செய்கிறவர் என்கிற தகுதி தான்.

THIRU T. MARTIN: Sir, Press Correspondents in Delhi are being given accredition and they are treated as Government servants by the Central Government. So, may I request the Hon. Minister to state whether there is any proposal pending before the Government to give such accredition to the Press Correspondents here and treat them as Government servants with regard to matters pertaining to the allotment of houses, etc.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அது பத்திரிகை நிருபர்களுக்கு அளிக்கப்படுகிறது.

ஐ. ஏ. எஸ். அதிகாரிகள்

*190 வினா.—**திரு. ஏ. எம். இராஜா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழகத்தில் பணியாற்றுகின்ற ஐ. ஏ. எஸ். அதிகாரிகளில் தமிழ் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஒருவருமில்லை.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கும் ஐ. ஏ. எஸ். அதிகாரிகளில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தனிக் கேள்வி போட்டால் விளக்கம் அளிக்கலாம்.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, தமிழ் மொழி தெரியாத வேற்று மாநில அதிகாரிகளை தமிழகத்தில் ஐ. ஏ. எஸ். அதிகாரிகளாக நியமிக்க வேண்டாமென்று ஒரு கோரிக்கையை மத்திய சர்க்காருக்கு இந்த அரசு விடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எப்படி வேறு மாநிலத்திலுள்ளவர்கள் இங்கே இருக்கிறார்களோ, அதே போலத் தமிழ் மாநிலத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் வேறு இடங்களுக்குச் சென்று அந்த மாநிலங்களில் பதவியில் இருக்கிறார்கள்.